சிவமயம்

[illegible] aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு ஆவணி மீ கஎ உ (1947 செப்டம்பர் 2 செவ்வாய்க்கிழமை) [இல சஉ

## கடவுளும் விஞ்ஞானமும்

### A பாலசுந்தரம்

உலகனைத்தையும் படைத்துச் சரிவர நடத்தி அதனை மீண்டும் மறைத்துப் படைப்பவனே கடவுள். அவன் பேராற்றலுடையவன். உண்மை. அறிவு, இன்ப வடிவினன். அடியார்க்கு எளிவந்து அருளுந் தன்மையன். தூய்மையின் எல்லை; மன அமைதியின் (சாந்தியின்) வாழ்வு; எல்லையற்ற இன்பக் கருவூலம். மக்கள் உயிர். உயிர்க்கு உயிர்,

> அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
> அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
> ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின்
> நூற்றொரு கோடியின் மேற்பட"

விரிந்தனவாகிய இப்பெரும் புவனப்படைப்பு ஓர் வினைமுதலின்றித் தானே தோன்றக்கூடியதன்று. இஃது படைத்தற்றொழிலிற் கைதேர்ந்த கடவுளின் அழகிய வினையாகும்.

> "உலகெலா மாகிய வேருய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
> அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத்
> தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித்தானே
> நிலவுசீர் அயலனுகி நின்றனனை நீங்கா தெங்கும்"

என்ற மெய்ம்மொழிக் கிணங்க கடவுள் இதை நடத்துதற்குத் தானே ஈண்டிருக்க வேண்டுமென்ற நிலையுமில்லை. தனதாற்றல் முழுவதையுஞ் செலுத்த வேண்டுவதும் இல்லை அவன் இத்தகையோர் நற்றிறம் படைத்தவனவன்.

இக்காலத்தில் அமைதியின்மையும, அல்லலுமே எங்கும் பரவியுள்ளன, மனிதப்பிறவி அமைதியின்மைக்கும், அல்லலுக்கும் உண்டானதில்லை) செல்வத்திலுள்ள பற்றுள்ளமும், புகழிலுள்ள ஆர்வமும், புலன்களில்மீதூர்ந்து செல்லும் விருப்பமும் மக்களை நுகர்ச்சியில் போகத்தில் ஆழ்த்திவிட்டன. புலன் நுகர்ச்சியில் விருப்பமுள்ள வரை மன அமைதியேற்படுவதில்லை ம அமைதியின்றி இன்பக் கனவு காணுதல் வீண் தொழிலோடு பொருத்தமில்லாமையாகும்.

இக்காலத்திற்கு மற்றோர் சிறப்புமுண்டு. கல்வி அறிவில்லாதவர்களும் ஒருபொருளை யேற்றுக் கொள்வதற்கு முன்னுல், அதற் கேற்ற சான்றுகளைக் கேட்கின்றனர். யாதாயினும் ஓர் வினை தொடங்குவதற்கு முன்னுல், அதற்கேற்ற சான்றுகளைக் கேட்கின்றனர். யாதாயினும் ஓர் வினை தொடங்குவதற்கு முன்னரே அவ்வினையால் இன்ப நுகர்ச்சியாகிய பயன் திண்ணமாக உண்டு என்ற முடிவை யடைகின்றனர். தாம் விரும்பிய இன்பம் வினைதொடங்கிய அளவில் உண்டாகும் பயனில் இல்லையென்றுல்; அவர்கள் அத்தகைய வினைக்கு முயற்சியும்; செய்ய மாட்டார்கள். இதுவே இன்றைய மக்களின் விருப்பு! நுகர்ச்சியி லாழ்ந்த ஆர்வ மென்னும் நங்கையின் ஆடையற்ற நடனம்!

இத்தகையோர் நிலைத்த இன்பத்தை அடைவதற்குரிய கவலையில் ஆழ்கின்றனர். கவலை துன்பத்தின் ஓர் உருவம். விரும்பிய இன்பம் கிடைத்த காலத்தில் 'அவ்வின்பத்திற்கு இறுதியும் உண்டு கொல்' என்ற அச்சம் உண்டாகின்றது. இன்பத்தை இடைவிடாது நுகர்ந்தால் அவ்வின்பத்தில் வெறுப்புத்தானே உண்டாகிறது. ஆதலால் உலக இன்பத்தின் இறுதிநிலை துன்பமாகும்.

உண்மை இன்பம் உயிர் இறைவனுடன் கலத்தலால் உண்டாகிறது. இறைவன் மனிதனுக்கு 'இது செய்யத் தக்கது இது செய்யத் தகாதது, என்றறியும் ஆற்றலைக் கொடுத்திருக்கிறுன். ஆசை வாய்ப்பட்டுப் பொறியின் வாயிலாக நுகரும் புலனுக்காக அலைகின்றவனுக்கு அவன் உயிர் வாழ்நாளைத் தருவதல்லது வேறோர் உதவியுஞ் செய்வதில்லை. அன்றியும் அவன் துன்பத்திற்கும் அமைதியின்மைக்கும் ஆளாகி இறக்கின்றுன். உடலிலிருந்து உயிர் நீங்கினுல் மதிப்பற்றுவிடுகிறது.

முற்காலத்தில் விஞ்ஞானிகள் உயிரில்லாத பொருள்களிலிருந்து உயிர்ப்பொருளை உண்டாக்கலாம் என்று கூறினர். வர்ஜில் (Viripl) என்பவர் கோதுமை மூளையிலிருந்து எலிகளையும், இறந்த மாட்டிறைச்சியில் இருந்து தேனீக்களையும் உண்டாக்கலாம் என்று கூறினுர். இம்மயக்கத்தைப் பதினேழாம நூற்றுண்டிலே இரேடி (Redi) என்னும் விஞ்ஞானி அகற்றினுர். அழுகிய இறைச்சியில் புழுக்கள் ஈக்களால் உண்டாகின்றன வென்று இரேடி கூறினுர். இதற்கிடையில் நுண்பொருட் பெருங்காட்டி (Microscope) என்னுங் கருவி தோன்றியது. இதனுல் இத்தகைய ஐயப்பாடுகளை யகற்றுதல் மிகவும் எளிதாகிவிட்டது. மிக மெல்லிய புலனுகாத உயிர்க்கு மூலம் உயிர்ப்பொருளேயாகும். உயிரற்ற அறிவில் பொருளில் இருந்து அறிவுடைய உயிர்ப்பொருள் தோன்றுதென்பது இக்காலத்திய விஞ்ஞானிகளின் கொள்கை. இரசாயன விஞ்ஞானி டால்டன் (Dalton) கண்ட முடிவு. 'எப்பொருளும் அழிவதில்லை' என்பதாகும். யாவரும் இக்கருத்தை யேற்றுக்கொள்ளுகின்றனர்.

மேல்நாட்டினரால் நாத்திகர்கள் என்று கூறப்படும் கோபர்னிக, கெலிலியோ. கேப்லர் முதலியோர் உண்மையில் கடவுள் கொள்கைக்கு விரோதிகள் அல்லர். ஆனுல், கிரித்துவக் கோயிலுக்கும், அதனுற் பரவிய மூடக்கொள்கைகளுக்கும்உயிர்ப் பகைவர்களாயினர்; கிரித்துவக் கோயில் அதிகார வர்க்கத்தினர் இவர்கள்மீது செய்த குற்றச்சாட்டால் இவர்கள் அடைந்த துன்பங்கள் மிகப்பல. இவர்கள் எல்லோரும் கணித சாஸ்திரிகள். இயற்கையில் ஒரு நிகழ்ச்சியும் ஏற்பாடு (கிய

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## பிரார்த்தனை

> இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
> நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்—சொல்லறத்தில்
> ஒன்றேனு மில்லேன் உயர்திருப் போரூரா
> என்றே நானீடேறுவேன்.

## கஷ்ட நிவாரணமுயற்சி

### கொழும்பு ஹிந்து ஸ்தாபனங்களின் தொண்டு

இராமகிருஷ்ண சங்கத்தினரும் கொழும்பு விவேகானந்த சபையினருமாகச் சேர்ந்து கொழும்பு நகர எல்லைக்குள் வெள்ளக் கஷ்ட நிவாரணவேலை தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் மேல்மாகாண அரசாங்க ஏசண்டருடனும் தருமபரிபாலன அதிகாரியுடனும் ஒத்துழைத்து மருதானையிலுள்ள ஓர் கஷ்ட நிவாரண நிலையத்தில் அன்னதானம் வழங்குகின்றனர். அத்துடன் நகர்ப்புறமாக உள்ள இடங்களிலும் ஏனைய தூர கிராமங்களிலும் கஷ்ட நிவாரண வேலைகள் செய்ய முயன்று வருகின்றனர்.

இராமகிருஷ்ண சங்கத்தையும் விவேகானந்த சபையையும் சார்ந்த பிரதிநிதிகள் கழனியா, வத்தலை, ஹெந்தலை, ஹன்வலை முதலிய இடங்கட்குச் சென்று அங்கு வெள்ளத்தால் கஷ்டமடைந்த பிரதேசங்களைப் பார்வையிட்டு. அரசாங்க ஏசண்டருடனும் ஏனைய ஸ்தாபனங்களுடனும் ஒத்துழைத்து ஹன்வலையில் அன்னதானம் புரிவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர் இப்பொழுது ஹான்வலையிலுள்ள ஓர் கஷ்டநிவாரண நிலையத்திலிருந்து உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

பணம், உணவு உடை. குடிசைகட்டுவதற்கு உபயோகப்படக்கூடிய சாதனங்கள் ஆகிய இவற்றை அனுப்பி வைக்குமாறு அன்பர்களை வேண்டுகின்றோம் என்று இராமக்கிருஷ்ண சங்கம்,கொழும்புவிவேகானந்தசபை ஆகியவற்றின் காரியதரிசிகள் தெரிவிக்கிறார்கள்.

## பர்மாவின் அழைப்பு

### நேருஜி செல்லலாம்

இந்த செப்டெம்பர் மாதம் முடிவதற்கிடையில் பர்மா அரசியல் நிர்ணயசபை, பர்மாவின் எதிர்கால அரசியலை நிர்மாணித்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாதம் கூடும் அரசியல் நிர்மாண சபைக்குச் சமுகமளிக்கும்படி இந்தியப் பிரதமர் பண்டிதர் நேருவுக்குப் பர்மிய அரசியல் தலைவர்கள் அழைப்பு விடுத்திருப்பதாக அமெரிக்க செய்தி ஸ்தாபனம் ஒன்று கூறுகிறது.

இச்செய்தி உண்மைதானு என்று இந்திய அந்நிய நாட்டு விவகாரப் பகுதி உத்தியோகத்தர்களைக் கேட்டபோது அவர்கள் தமக்குத் தெரியாது என்றனர்.

#### இந்திய உதவிப் பிரதமர்

இந்தியாவின் உதவிப் பிரதம மந்திரியாக சர்தார் வல்லபாய்படேல் தெரிவு செய்யப்பட்டிருக்கிறுர்.

## அரவிந்தர் செய்தி

### உலக ஒற்றுமைக்குப் பிரார்த்தனை

**இந்தியா சுதந்திரம் அடைந்ததை யொட்டி ஆகஸ்டுமாதம் 15-ந் தேதியன்று புதுச்சேரி ஆசிரமத்திலிருந்து மகான் அரவிந்தர் அடியிற்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறுர்:-**

ஆகஸட் 15-ம் தேதி சுதந்திர இந்தியா பிறந்தது. பழைய சகாப்தம் முடிந்துவிட்டது. புதிய சகாப்தம் ஆரம்பமாய்விட்டது. அந்தத் திருநாள் நமக்கு மாத்திரம் திருநாள் அல்ல. ஆசியாக் கண்டத்திற்கும், உலகத்திற்கும் சுபதினமாகும். எவ்வாறெனில், உலக சமுதாயக் குழாத்தில் ஒரு புதிய சக்தி சேர்ந்து உலக மக்களின் எதிர்கால அரசியல், சமுதாய ஆசாரம், பண்பாடு வளர்ச்சி, தெய்வீக தேஜஸ் ஆகியவற்றை வளர்க்கப்போகிறது. வருணனைக்கடங்காத மகாசக்தி அது இவ்வகையில் ஆகஸ்டு பதினைந்தாம் தேதி நமக்கு மாத்திரமல்லாமல் உலக மக்களுக்கெல்லாம் முக்கியமான நாள்....

ஆகஸ்ட் பதினைந்தாம்தேதி என்னுடைய பிறந்த தினம். என உபதேசத்தைக் கடைப்பிடித்தவர்கள் வருஷா வருஷம் என் பிறந்தநாளைக் கொண்டாடி வருகிறுர்கள். இவ்வளவுகாலமாக அந்நாள் எனக்கு மாத்திரம் விசேஷ நாளாக விளங்கி வந்தது. அப்படிப்பட்ட விசேஷ தினமானது இன்று உலகமகத்துவத்தைப்பெற்று விட்டது என்பதை எண்ணும்போது எனக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இதை நான் தற்செயலாகவோ, அதிர்ஷ்ட வசமாகவோ ஏற்பட்ட சம்பவமாகக் கருதவில்லை நான் சேவை செய்யத் தொடங்கிய காலம்தொட்டு ஒவ்வொரு அடி எடுத்துவைக்கவும் எனக்கு வழிகாட்டி இருந்துவரும் இறைவன் வகுத்த சம்பவமென்றே கருதுகிறேன்.

#### கனவும் நனவும்

என்னுடைய வாழ்நாளிலேயே கைகூடிவிடவேண்டு மென்று நான் விரும்பின உலக இயக்கங்களனைத்தும ஆரம்ப காலத்தில் பகற்கனவுகளாகத் தோன்றிய போதிலும்,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஸூ ஆவணிமீ ௧௭ செவ்வாய்க்கிழமை


## வெள்ளத்தால் விளைந்த சேதங்கள்

II

வெள்ளப் பெருக்கால் நேர்ந்த பெருஞ்சேதம் இங்ஙனமாக, அந்த நேரத்திலேயே கடுகண்ணாவை முதலிய சில தானங்களில் மலைப் பாகங்கள் இடந்து புகைரதப் பாதையிலும், தெருவீதியிலும் அயலிலுள்ள வீடு வாசல்களிலும சடுதியில் வீழலாயின; இப்படி அதிகமாக மலையிடிந்து வீழ்ந்தமை இலங்கையிலுள்ள மலைநாட்டில் முன்னொருபோது மில்லையாம்; இப்படி மலைப்பாகஞ் சடுதியில் இடிந்து வீழ்ந்தமையினால் நேர்ந்த பயங்கரமான பரிதாபமான உயிர்ச்சேதம் பலவுண்டென்பது உடனுக்குடன் அறியப்படாவிடினும் நாளுக்குநாள் அறியப்படலாயிற்று; கடுகண்ணாவையில் மலையிடிந்து தெருவில் வீழ்ந்தமையினால் அநியாயமாக மாண்ட உயிர்களின் செய்தி முன்னர் இப்பத்திரிகையிலும், ஏனைய பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது; சொந்த மோட்டோரதம் வைத்துள்ள ஒரு மனுஷன் அந்த ரதத்திலே தன்மனைவி, ஒரேயொரு குழந்தை, குழந்தையை வளர்க்குப் "ஆயாள்" என்னுமிவர்களை ஏற்றிக்கொண்டு, தானே ரதத்தைச் செலுத்திச் செல்லும்போது, கடுகண்ணாவைக் கணித்தாகவுள்ள பொலிஸ் தானத்திற் கப்பால் தெருமீது மலைப்பாகம் இடிந்து வீழ்ந்து குறுக்கே கிடப்பதையும் வெள்ளம் பெருகிப் பாய்வதையுங் கண்டு, தன்மனைவியையும் குழந்தையையும் ஆயாளையும் இரதத்தில இருக்கச் செய்துவிட்டுத் தான் மாத்திரம் இறங்கிப்போய் மீண்டு வருவதற் கிடையில், அந்த ரதம் நின்றஇடத்தில் மலை வீழ்ந்து திடராய்க் கிடப்பதை மாத்திரங் கண்டாரென்றால் அம் மனுஷன் படும்பாட்டைச் சொல்லவும் வேண்டுமா! இப்படி நேர்ந்த பரிதாபமான செயல்கள் இன்னும் பலவுள; அவற்றை யெல்லாம் இங்கே யெடுத்துக்காட்டி வாசிப்போர் கேட்போருடைய உள்ளத்தைப் புண்படுத்துவதனால் பயனில்லை.

வெள்ளப் பெருக்காலும் மலையிடிந்து வீழ்ந்தமையினாலும் அபாய மடைந்தவர்கட்கும் நஷ்டப்பட்டவர்களுக்கும் ஆபத்திலிருப்பவர்களுக்கும், அதிகாரிகளாயுள்ளார் தங்களால் என்ன என்ன உதவிகளைச் செய்தல் முடியுமோ அவைகளை யெல்லாம் பதைபதைப்புடன் இயன்றவரையில் துரிதமாகவே செய்து வருகிறார்கள்; நாலு பக்கமும் வெள்ளப் பிரவாகம் சூழ்ந்து நிற்க, சிறிய தீவகத்தில் அகப்பட்டார்போல் அகப்பட்டு வருந்தும் மக்களுக்கு அதிகாரிகள் ஆகாய விமானங்கள் மூலமாகவும உணவுப் பொருள்களைக் கொண்டுபோய் வேளைதோறும் இட்டு உதவிசெய்து வந்தனர்; வெள்ளப் பெருக்கிற் சேத முற்றும் வெள்ளத்தில் மூழ்கியுங் கிடந்த தெருக்களில் வெள்ளம் வடிந்துவிட, சேத முற்ற தெருக்களின் பாகங்களையும் வாராவதிகளையும் இன்ன பிறவற்றையும் அரசினர் சீர்திருத்தி மக்களும் வண்டிகளும் தொன்மைபோற் போக வரச் செய்துவிட்டார்கள்; சில நாட்களாக ஓடாது கிடந்த புகைவண்டித் தொடர்களும் இப்பொழுது, சில பாகங்களிலே ஓடிவரத் தொடங்கிவிட்டன; ஆனாலும் மலைப் பாகங்களிலேயுள்ள புகைரதப் பாதைகளில் வண்டிகள் இன்னமுங் கிரமமாக ஓடத் தொடங்கவில்லை யெனவும், இப்பொழுது கம்பளைவரையோடுகிற தெனவும் அறியலானோம்.

இவை இங்ஙனமாக, கொழும்பு நகருக்கும் இலங்கையின் ஏனைய பாகங்களி லுள்ள பட்டினங்களுக்கு மிடையே யுள்ள புகைரதப் போக்குவரவு சில நாட்கள் தடைப்பட்டமையினால், அந்த அந்தப் பட்டினங்களுக்கென விநியோகிக்கப்பட்ட அரிசி, மா, சீனி, மண்ணெய் முதலிய கூப்பன் மூலமாகப் பெறப்படும் பொருள்களும் குறைந்துபோக, ஆங்காங்குள்ள மக்கள் படுங் கஷ்டமும் அதிகரித்து வரலாயிற்று; பெருமழையும் வெள்ளப் பெருக்கும் மத்திய மாகாணம் முதலிய சில மாகாணங்களில் நேர்ந்தமை நிசமெனினும், இவற்றால் இலங்கை முழுவதிலு முள்ள மக்கள் பாதிக்கப்படுவாராயினர்; பெருமழையும் வெள்ளப் பெருக்கும் சேர்ந்து சேதம் விளைத்துப் பல நாட்கள் கழிந்தன வெனினும் "மழைவிட்டுந் தூவானம் மாறவில்லை யென்றாங்கு" அவற்றால் நேர்ந்துள்ள அநர்த்தம் இன்னமும் ஒழிந்த பாடில்லை யெனலாம். மனுஷருடைய பிரேதங்கள் ஆற்றில் மிதந்தபடி அள்ளுண்டு போகக் காணப்பட்டன வெனவும் இன்னமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இருக்க வீடின்றிக் கஷ்டப்படுகின்றார்களெனவும் நேற்று முந்தை நாள் கிடைத்தனவாகிய கொழும்புத் தினசரிகளிற் காணப்படுகின்றன. எப்படி முன் எக்காலத்தாயினும் இலங்கையிற் பெருமழை வெள்ள மென்னு மிவைகள் காரணமாய் பெருஞ்சேதம் நேர்ந்ததில்லையோ, அப்படியே முன்னர் எக்காலத்தாயினும் அரசினர்க்கு இச் சேதங்களைச் சரிப்படுத்துதற்கான பொருட் செலவும் நேர்ந்ததில்லை யெனலாம். அரசினர்க்கு நேரும் பெரும் பொருட் செலவை இப்பொழுது கணக்கிடல் முடியாதாம்.

ஆனாலும் இந்த வெள்ளத்தாற் பலவகையான சேதங்களையடைந்து கதியற்று நிற்கும் மக்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு இலங்கைத் தேசாதிபதி மூலமாகவும், மற்றை அபிமானிகள் மூலமாகவும் பெருந்தொகைப்பணம் துரிதமாகச் சேர்க்கப்படுவதோடு, இந்திய அரசினரும் ஒரு பெருந்தொகைப் பணத்தை அனுப்புதற்கு முற்பட்டு நிற்கின்றன ரென்பது பெரும் ஆறுதலைத் தருஞ் செய்தியாகும்.

இப்பொழுது இலங்கைக்கு நேர்ந்த இந்தப் பேரநர்த்தம் பஞ்சபூதங்களுட் பிருதுவியின் அம்சமாகிய மலை, அப்புவின் அம்சமாகிய மழை வெள்ளம் என்னு மிரண்டொடு வாயுவின் அம்ஸமாகிய காற்று என்னு மிவைகளின் கிளர்ச்சியினால் நேர்ந்தவாகும்; இவற்றின் செயலைத் தடுப்பதற்கும் இவற்றால் இடையூறு நேராவண்ணங் காப்பதற்கும் எண்வகை வடிவினனாகிய அந்த இறைவ னொருவனலன்றி இந்த மனுஷ அதிகாரிகளால் ஒருபோதும் முடியாது; ஆதலால் இப்படியான பேராபத்துக்கள் வரவிடவொண்ணாதென எல்லாம்வல்ல இறைவனை மக்கள் சதா பிரார்த்தித்தல் வேண்டும்.

## வெள்ள நிவாரணம்

### அரசாங்கத்தின் முயற்சி

சமீபகாலத்தில் ஏற்பட்ட வெள்ளவிபத்தில் அகப்பட்டவர்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் தீவிரமாகமுயற்சிசெய்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வீடுகளைத் திருப்பிக் கட்டுதற்காகக் குடும்பம் ஒன்றுக்கு 300 ரூபாவீதம் உதவ அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது.

வீட்டுப் பாத்திரங்களான சட்டி, பானைகளும், பாய் தலையணைகளும் இழந்தவர்களுக்கு அரசாங்கம் வாங்கிக் கொடுக்கும்.

## நாலாவது வெற்றி

### ஒருவர் கட்டுப்பணம் இழந்தார்

நேற்றைத்தினம் நிகழ்ந்த கோப்பாய்த் தொகுதித் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு. ஸீ. வன்னியசிங்கம் 4353 அதிகமான வாக்குச் சம்மதங்கள் பெற்று வெற்றியடைந்தார். விபரம் வருமாறு:—

| | |
|---|---|
| ஸ்ரீ ஸி. வன்னியசிங்கம் (த. காங்கிரஸ்) | 9619 வா |
| ஸ்ரீ சு. இராசரத்தினம் (ஐ. தே. க) | 5266 ,, |
| திரு. ஸி இரகுநாதன் (சுயேச்சை) | 1447 ,, |
| பழுதானவை | 276 ,, |

திரு. ரகுநாதன் தமது கட்டுப் பணத்தை இழந்தார்.

வருகிற வியாழக்கிழமை யாழ்ப்பாணத் தொகுதிக்கும், பொட்டுவில் தொகுதிக்குமான தேர்தல் நிகழும்.

சட்சிகளின் நிலைமை இப்போது வருமாறு,

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 12 |
| தமிழ்க் காங்கிரஸ் | 4 |
| சமசமாஜிகள் | 7 |
| போல்ஷெவிக் லெனின்கட்சி | 2 |
| சமதர்மிகள் | 1 |
| சுயேச்சை வாதிகள் | 3 |
| | 29 |

## பிரிட்டிஷ் பிரதமராக மவுன்ற்பேற்றன்

இங்கிலாந்தின் பொருளாதார நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு அங்கே ஓர் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படல்வேண்டும் என்றும், அதற்குப் பிரதமராக, இந்தியாவின் "கவர்னர் ஜெனரல்" மவுன்ற்பேற்றன்பிரபுவே தெரியப்படல் வேண்டுமென்றும் "ஸன்டே டிஸ்பாச்" என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை ஓர் ஆலோசனை கூறியிருக்கிறது.

## தமிழர் நாகரிகம்

### அயல் நாடுகளில் பரவியுளது

ஹிந்து அமெரிக்கா என்ற நூலை எழுதியவரும் டில்லிப் பத்திரிகை நிருபருமான ஸ்ரீமான் சாமன்லால் என்பவர் அமெரிக்காவில் பல பகுதிகளுக்குச் சென்று பார்த்ததில் அங்கெல்லாம ஆதியில் தென்னாட்டார்—தமிழ்நாட்டார் தொடர்பு இருந்ததற்கு அடையாளங்கள் இருப்பதைக் கண்டாராம். மெச்ஸிகோவிலும் தென் அமெரிக்காவிலும் தென்னாட்டு வழக்கங்களை அவர் கண்டாராம். கலிபோர்னியா மாநாணத்தில் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரத்தில் மெக்ஸிக்கோ விடுதியில் அவர் ஒருநாள் சாப்பிட்டாராம். அங்கே சப்பாதிபோன்ற தோசையும், பருப்பும், சட்னியும், ஊறுகாயும், இந்தியாவில் வழங்கும் தித்திப்பு மிட்டாய்களும் பரிமாறினார்களாம். அமெரிக்காவில் வழங்கும் பாஷைகளில் பல இந்திய மொழிகளை வழங்குகின்றனராம். மத்திய அமெரிக்காவில் கலியாண காலங்களில் குங்குமம் அணியும் வழக்கமும் மாட்டுச்சண்டையும் இப்பொழுதும் நடந்துவருகின்றன.

மாயாநாட்டில் உள்ள பாழடைந்த கோயில்கள் தென்னாட்டுக்கோயில்களைப்போல இருக்கின்றனவாம் அவற்றின் படங்களை ஸ்ரீமான் சாமன்லால் கொண்டுவந்திருக்கிறார். அவற்றில் ஒன்று சிதம்பரத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தைப்போல விளங்குகிறதாம்.

ஸ்ரீமான் சாமன்லால் தென்னாடெங்கும் சுற்றிக் கல்விமான்களையும் சிலாசாசன ஆராய்ச்சிக்காரர்களையும் கண்டு பேசியிருக்கிறார் அவரது ஆராய்ச்சியால் பல அரிய விஷயங்கள் விளங்குமென்று தெரிகிறது.

தற்கால இந்தோசைனாவின் ஒருபகுதியும் பழைய ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றுமான கம்போடியா என்ற கம்போஜநாட்டில் அங்கோர்வாட் என்ற நகரில் பழமையான சிவன்கோயிலும் விஷ்ணுகோயிலும் பாழடைந்து கிடக்கின்றன.

ஜாவா, சுமத்ராத் தீவிலும், பாலித் தீவிலும் இந்தக் கோயில்களையும் நாகரிகத்தின் சின்னங்களையும் காண்கிறோம். இவற்றாலெல்லாம் இந்துநாகரிகம்—சிறப்பாகத் தமிழர் நாகரிகம் அலைகடலுக்கப்பால் பல தொலை நாடுகளிலும் பரவியிருந்ததென்பது மிகத் தெளிவாய் விளங்குகிறது.

—லோகோபகாரி.

## ருஷியாவும் இந்தியாவும்

"இந்திய மக்களில் முற்போக்குக் கருத்து உள்ளவர்கள், பிளவுபடாத ஜனநாயக இந்தியாவை சிருஷ்டிக்க போரை நீடித்து நடத்துகிறார்கள்" என்று ரஷ்ய தொழிற்சங்க பத்திரிகை "டிரட்" எழுதுகிறது.

'இந்தியாவை ஹிந்து ராஜ்யம், முஸ்லிம் ராஜ்யம் என்று பிளந்ததால் மதவேற்றுமைகள் ஜாஸ்தியாகின்றன என்பதை பஞ்சாப் ரத்தக் களரிகள் நிரூபிக்கின்றன. தூண்டப்படும் மதவேற்றுமைகள், இந்திய மக்களின் உண்மை சுதந்திரத்திற்கு பெரிய முட்டுக்கட்டைகளாகும்.

'முற்போக்கு இந்தியர்கள் ஹிந்து முஸலிம் ஒற்றுமைக்காகவும் பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்துடன் எல்லாத் தொடர்புகளையும் துண்டிக்கவும், பழங்கால ஜமீன்தார்கள் முறையை ஒழிக்கவும் இன்னும் பாடுபட்டு வருகின்றனர். இவற்றில்தான் ஐக்கிய முற்போக்கான உண்மை சுதந்திர இந்தியாவுக்கு உத்தரவாதம் இருப்பதாக அவர்கள் கருதுகின்றார்கள்' என்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் புதிய கட்சி

## ஜனவரியில் அங்குரார்ப்பணமாகும்

( நமது நிருபர் )

யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய அரசியற்கட்சியை அங்குரார்ப்பணம்செய்யச் சில பிரமுகர்கள் முயற்சி செய்கிறார்கள் என்று அறிகிறேன். இலங்கையிலுள்ள பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சமசமாஜக் கட்சி, சமதர்மக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி என்பவற்றால் இந்நாட்டுக்கு "ஓர்பேர்தம் சாஸ்வதமான நன்மைகிடைக்கா'தாகையால்மேலே காட்டிய கட்சிகளின் நல்ல அம்சங்கள் எல்லாவற்றையும் திரட்டி உருவாக்கி, ஓர் அரசியற்கட்சியை அமைக்கவேண்டும் என்பதே இப் புதிய கட்சியை அங்குரார்ப்பணம் செய்ய எண்ணுவோரின் கருத்தாகும்.

இப்பதிய கட்சியை இப்போது ஆரம்பித்தல் சமயோசிதமானதல்ல என்று இவர்கள் கருதுகிறார்கள். பொதுத் தேர்தல் நடந்து முடிந்து, அத்தேர்தலின் பயனாக எழுந்த கிளர்ச்சிகள் யாவும் அடங்கியபின், பொதுஜனங்கள் நிலைமையைச் சீர்தூக்கி யோசிக்க அவகாசம் அளித்த பின்னரே இப்புதிய கட்சியை அங்குரார்ப்பணம் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள்.

இப் புதிய கட்சி, இந்தியாவிலே ஸ்ரீஜுத் ஜெயப்பிரகாஷ் நாராயண், ஸ்ரீமதி அருணா அஸாப் அலி, ஸ்ரீஜுத் அச்சுத பட்டவர்த்தனர் என்பவர்களைத் தலைவர்களாகக் கொண்ட சமதர்மக் கட்சியைப் போன்றதாகவிருக்கும். இந்நாட்டில் மலிந்திருக்கும் வறுமைப் பிணியைப் போக்கி, ஆயிரக் கணக்கானோர் பட்டினியால்வாட ஒருவன் இந்திரபோகம் அநுபவிக்கும் முறையை மாற்றி சமூகத்தைப் புனருத்தாரணம் செய்வதே இப்புதிய கட்சியின் நோக்கமாகும்.

இப்போது இலங்கையில் உள்ள சமசமாஜக் கட்சியும் சமதர்மக் கட்சியும் மேலே காட்டிய அதே லட்சியத்துடன்தான் இருக்கின்றன, ஆனால் அந்த லட்சியத்தை அடைவதில் அவை கைக்கொள்ளும் முறை பிழையானது என்றும், கடவுள் இல்லை, கோவில் இல்லை, சமயம்இல்லை, ஆசாரானுட்டானங்கள் இல்லை என்று நிரீச்சுர வாதம்பேசி புரட்சி முறைகளைப் பின்பற்றக்கூடாதென்றும், எங்கள் சமயம், கலை, ஆசாரனுட்டானம் என்பவற்றைப் பேணிச் சீரிய முறையில் சமத்துவம் நிலைநாட்டப்படவேண்டும் என்றும் இந்தப் புதிய அரசியற் கட்சியாளர் கூறுகிறார்கள். இன்னும் இங்குள்ள அரசியற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பொருளாதார சமூக ஊழல்களைப் போக்குதற்கும் நாம் ருஷிய சமதர்மத்தைப் பின்பற்றிப் பலாத்காரத்திலும் புரட்சி இயக்கத்திலும் ஈடுபடாமல் சாத்விக முறையிலேயே நாட்டை நன்னிலைக்குக் கொண்டுவரலாம் என்றும் இவர்கள் கருதுகிறார்கள்.

இந்தப் புதிய கட்சி அநேகமாக அடுத்த ஜனவரி மாதத்துடன் ஆரம்பமாகலாம். அதற்கான ஏற்பாடுகள் இப்போது ஆரம்பிக்கப்படுகின்றன இக்கட்சியில் சிங்களர், தமிழர், இஸ்லாமியர் யாவரும் சேரலாமாம்.

# சகோதரர் பிணக்கு

## டிஸ்திரிக்கோட்டில் வழக்கு

தன்னுடைய சகோதரரான திரு. க. பொன்னம்பலம் (யாழ்ப்பாண நகர சபைத்தலைவர்) தமக்கு விரோதமாக வட மாகாணத் தலைவர்க்கு ஓர் மநுச் செய்திருந்த படியால், தனக்கு மானநட்டமாக 5000 ரூபா தரவேண்டு மென்று திரு. க. சிற்றம்பலம் யாழ்ப்பாண டிஸ்திரிக் நீதிஸ்தலத்தில் ஓர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார், திரு. சிற்றம்பலம் அரசாங்கத்தின்கீழ் சிவில் சேர்விஸ் உத்தியோகத்தராகப் பல வருடகாலம் கடமை பார்த்தவராவர்.

தம்முடைய முறைப்பாட்டில் திரு. சிற்றம்பலம் பின்வருங் கருத்துப்படக் குறிப்பிட் டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் 'செல்லமுத்து ஆலயம்'' என்னும் வீட்டின் சொந்தக்காரர் நான். இந்த வீட்டை விற்க நான் ஆயத்தப்படுத்தி அதற்காகப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தினேன். இவ்விளம்பரத்தைக் கண்ணுற்ற வித்தியா பகுதியார் அந்த வீட்டை 35,000 ரூபாவாக வாங்க ஆயத்தமாக இருந்தார்கள். அப்படி யிருக்க, சென்ற ஜனவரி மாதம் 16-ம் திகதி ஸ்ரீ பொன்னம்பலம் (தமது சகோதரர்) இந்த வீடு 35,000 ரூபா பெறாது என்றும், இப்படிப் பணங் கொடுத்து வாங்குவதால் அரசாங்கம் பணத்தை அநியாயமாகச் செலவு செய்கிறதென்றும், இன்னும் பலவிதமாகவும் குறைகள் கூறி. மாகாணத் தலைவர்க்கு ஓர் பெட்டிசம் அனுப்பினர். இதனால் எனக்கு மானநட்டமும், பொருள் நட்டமும் ஏற்பட் டிருக்கிறது.

குறித்த முறைப்பாட்டிற்கு, திரு. பொன்னம்பலம் இப்போது மறுமொழி கொடுத்திருக்கிறார். இந்தக் காணிவிஷயமாக மாகாணத் தலைவர்க்கும் வித்தியா பகுதி யதிகாரிக்கும் தான் ஓர்கடிதம் எழுதியது உண்மைதா னென்றும், அக்கடிதத்தைத் தான் இப்போதுதானும் அப்படியே ஆதரிப்பதாதவும் தம் முறைப்பாட்டில் ஸ்ரீ பொன்னம்பலம் கூறியுள்ளார்.

இன்னும், தனது கடிதத்தில் உள்ளசில பாகத்தில் தான் கூறியமை அனைத்தும் உண்மைதான் என்றும், தன் கடமை கருதி உண்மையை விளக்கத் தான் அப்படிச் செய்ததாகவும் ஸ்ரீ பொன்னம்பலம் மறுமொழி கொடுத்து, முறைப்பாடு செலவுடன் நிராகரிக்கப்படல் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் திகதிக்குத் தவணையிடப்பட் டிருக்கிறது.

# வகுப்புவாதம் வேண்டாம்

## பண்டாரவளைப் பிரதிநிதியின் பேச்சு

"நான் ஒரு தமிழனாக விருந்தும் வாக்காளரில் மூன்றில் இரண்டுபங்கினர் சிங்களராயுள்ள ஓர் தொகுதியில் வெற்றிபெற்றேன். என்னுடன் போட்டியிட்ட இரு சிங்கள அபேட்சகர் பெற்ற சிங்களர் வாக்குக்களிலும் பார்க்க, நான் அதிகமான சிங்களரின் வாக்குச் சம்மதங்களைப்பெற்றிருக்கிறேன். இது எதனைக் காட்டுகிறது. இது சிங்களமக்களின் பெருந்தன்மையைக் காட்டுகிறது'' என்று பண்டாரவளைத் தொகுதியில் இருந்து வெற்றிபெற்றுப் பாராளுமன்றத்தங்கத்தவரான ஸ்ரீ கே. வி. நடராஜா அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை, பதுளை நகரமண்டபத்தில் அவர்க்களிக்கப்பட்ட வரவேற்புபசாரக் கூட்டத்திற் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:

"சிங்களர், தமிழர், இஸ்லாமியர் என்ற வகுப்புப் பிரச்சினையைக் கிளப்புவோர் தேசத்துரோகிகள். அவர்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாவர்.''

பண்டாரவளைத்தொகுதியில் இந்தியத்தொழிலாளர் தம் வாக்குச் சம்மதங்களைச் சீட்டில் சரிவரக் குறிப்பிட்டனர் என்றும், சிங்கள வாக்காளரிற் பலர் அப்படிச்செய்ய அறியாதுவிட்டனர் என்றும் ஸ்ரீ நடராஜா குறிப்பிட்டார்.

# தேசாதிபதிகள் கடமை

## மகாத்மாகாந்தியின் விளக்கம்

இந்தியாவிலே, சென்னை, பம்பாய் என்னும் இரண்டு மாகாணங்கள் ஒழிந்த ஏனைய மாகாணங்களில் இந்தியரே தேசாதிபதிகளாக இருக்கிறார்கள். இவர்கள் எப்படித் தம் சீவியத்தை நடாத்தவேண்டும், எப்படித் தம அரசியற் பரிபாலனத்தை நிர்வகிக்கவேண்டும் என்று மகாத்மாகாந்தி தம்முடைய ஹரிஜன் பத்திரிகையில் ஓர் கட்டுரை வரைந்திருக்கிறார். அதில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"ஓர் தேசாதிபதி முதலில் மதுபானம் என்பதனை வெறுப்பவராயிருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் கொடிய மதுவரக்கனை நாட்டினின்றும் அகற்றி மதுவிலக்கை வற்படுத்த முடியாது.

"அடுத்ததாக அத்தேசாதிபதிராட்டினத்தின் ஊழியராக இருத்தல் வேண்டும். ராட்டினத்தின் நாதமும் கதர்மணமும் அவர் வசிக்கும் சுற்றுடலில் பரிமளிக்கவேண்டும். ஊமைகளபோல அவதிப்படும் கோடிக் கணக்கான மக்களின் இன்னல்களைப் போக்குவது கதரும் ராட்டினமும்தான். அவ்வின்னல்களைப் போக்கு மறிகுறியாகத் தேசாதிபதி விளங்கவேண்டும்.

"மூன்றாவதாக எல்லாரும் இலகுவில் அவரை அடைந்து தம் குறைகளைக் கூறக் கூடியதாக அவர் ஓர் குடிசையில் வசிக்கவேண்டும். ஆனால் ஜனங்கள் கண்டபடி அவருடைய வேலையைக் குழப்பித் தொந்தரவு கொடுக்காமலிருப்பதற்கான ஓர் இடத்தை அமைக்கலாம். மாடமாளிகைகள் தேசாதிபதிகளுக்கு வேண்டியதேயில்லை. இதுவரை இங்கே வெள்ளைக்காரர் தேசாதிபதிகளாக விருந்தனர் அவர்கள் பிரிட்டிஷாரின் பராக்கிரமத்துக்கும் வலிமைக்கும ஓர் சின்னமாகவே யிருந்தனர். அவர்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தூண்களான அவர்களுடைய தாஸர்களும் வசிப்பதற்காகப் பெரிய அரண்களைக் கட்டிவைத்தனர். இந்தியத் தேசாதிபதிகளும். அந்நியநாட்டுத் தூதரையும், சமஸ்தானாதிபதிகளையும் வரவேற்றுபசரிக்க ஓரளவுக்குப் பெரிய மாளிகைகளை வைத்திருக்கலாம். ஆனால் டம்பமானசெலவுகள் செய்யக்கூடாது. வீண் அலங்காரங்களில் கவனத்தைச் செலுத்தக்கூடாது, அவசியமற்ற சுதேசத் தளபாடங்களோ, அந்நியத் தளபாடங்களோ வைத்திருக்கக்கூடாது எளிய வாழ்க்கை, உன்னதலட்சியம், இவைதான் இந்தியத் தேசாதிபதிகளின் குறிக்கோளாக விருத்தல் வேண்டும்.

"இந்தியாவில் தேசாதிபதியாக இருக்கும்ஒருவர் குறிக்கப்பட்டசாதிக்கோ சமூகத்துக்கோ, சொந்தமானவர் அல்லர். அவர்எல்லார்க்கும்பொதுவானவராக இருத்தல் வேண்டும். அவருக்குச் சாதி சமயபேதம் இருக்கக்கூடாது. எல்லாச் சமயங்களிலும் கூறப்பட்ட பெரிய உண்மைகளை தம் மகத்தே கொண்டவராய், ஏழைத் தேசம், மேலைத்தேசம் என்னும் இரு தேசச் சிறப்புக்களைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்; இந்தியாவின் பிரஜை என்ற தன்மையில் அவர் உலகப்பிரஜையாயும் இருத்தல்வேண்டும். இப்படிப்பட்டவர்களே ... மகாராஜன் ... ."

இந்திய அரசியல்

# பாஞ்சாலப் படுகொலை

## முஸ்லீம் காடையரின் அக்கிரமம்

### பாஞ்சால நிலைமை

மேற்குப்பாஞ்சாலத்து முஸ்லிம்காடையரால் பல்லாயிரக் கணக்கில் ஹிந்துக்களும் சீக்கியரும் கொல்லப்பட்டுவிட்டனர் கிழக்குப் பாஞ்சாலத்தில் அதேபோலப் பல்லாயிரக்கணக்கில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு விட்டனர். பாகிஸ்தான் அமைக்கப்பட்டவுடன் வகுப்புக் கலகம் ஓய்ந்துவிடும் என்று ஜின்னாசாய்பு அன்று பறைசாட்டினர், ஆனால் இன்று பாகிஸ்தான் உருவாகியும் வகுப்புக் கலகம் ஓயவில்லை. ஓர் பெரிய யுத்தத்தில்தானும் இவ்வளவு சொற்பதினங்களில் இப்படியாக ஜனங்கள் கொன்று குவிக்கப்படமாட்டார்கள். இந்தியச்சமஷ்டிக்குச் சேர்ந்துள்ள கிழக்குப் பாஞ்சாலத்தில் இப்போது நிலைமை ஒருவாறு சீரடைந்து வருகிறது. ஆனால் பாகிஸ்தானுடன் சேர்ந்த மேற்குப் பாஞ்சாலத்தில் முஸ்லிம்களின் அக்கிரமம் குறையவில்லை என்றும் ஹிந்துக்களைக் கொல்வதும் அவர்கள் பொருள்களைச் சூறையாடுவதும் தீக்கிரையாக்குவதும் கொல்லப்படாதவர்களை மதமாற்றம் செய்வதும் பெண்களைப் பலவந்தமாகக் கற்பழிப்பதும் அங்கேசர்வசாதாரணமாகிவிட்டதென்று அங்கிருந்து வெளியேறிக் கிழக்குப் பாஞ்சாலத்திற்கு வந்துள்ள பலர் கூறுகின்றனர். லட்சக் கணக்கில் மக்கள் மேற்குப்பாஞ்சாலத்தை விட்டு வெளியேறிவிட்டனர். இவர்களுக்கெல்லாம் ஒதுக்கிடம்கொடுப்பது இந்திய அரசாங்கத்துக்குப் பெரும் வேலையாய் விட்டது. இந்த அகதிகளை ஏற்றுக்கொள்ள ... முன்வந்திருக்கின்றன.

### ஜின்னாவின் தந்திரஜாலம்

இந்த வகுப்புக் கலகங்களுக்கெல்லாம் ஜின்னாசாய்புவும் அவரது கையாட்களும் தான் மூலகாரணம் என்று சொல்லப்படுகிறது. வகுப்புக் கலகத்தை யடக்குவதற்கு அவர் அரைகுறையான ஒத்துழைப்பைத் தானும் இந்திய அரசாங்கத்துக்கு உதவவில்லையென்று பண்டிதர் நேரு பகிரங்கமாகக் கூறிவிட்டார். பாகிஸ்தான் பிரதேசங்களிலே சிறுபான்மையோர் பிரச்சினை இல்லாமல் அவர்களை வேரறப்பதே ஜின்னாவின் அந்தரங்க நோக்கம் என்று விஷயமறிந்தவர்கள் கூறுகின்றனர். மேற்குப் பாஞ்சாலத்தில் முஸ்லிம் காடையர் செய்யும் அக்கிரமங்களை அறிந்த கிழக்குப்பாஞ்சால ஹிந்துக்களும் சீக்கியரும் ஆத்திரமடைந்து பழிக்குப்பழி வாங்கி வருகின்றனர்.

O

### ஜனமாற்றம்

இந்த நிலைமை மாறவேண்டுமானல். மேற்குப் பாஞ்சாலத்திலுள்ள சிறுபான்மையினர் தம் சமூகத்தினர் வசிக்கும் கிழக்குப் பாஞ்சாலத்துக்கும், கிழக்குப் பாஞ்சாலத்தில் உள்ளவர்கள் மேற்குப் பாஞ்சாலத்திற்கும், மாற்றப்படல்வெண்டும்என்ற முடிவுக்கு நேரு அரசாங்கம் வந்திருக்கிறது இந்தச் சன மாற்றத்தைச் செய்தற்கான வேலைகள் இப்போது ஜரூராக நிகழ்கின்றன. இதற்கிடையில் பாகிஸதான் பிரதம மந்திரி மிஸ்டர் லியாகத் அலிகானும், பண்டிதர் ஜவஹர்லால் நேருவும் சேர்ந்து கிழக்குப பாஞ்சாலத்திற்கு விஜயம் செய்கின்றனர். மேற்குப் பாஞ்சாலத்துக்கு சர்தார் அப்துல்றப் நிஷிட்டர் என்னும்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாதி மாச விசேஷ தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1-ந் | திகதி | (17-9-47) | புதன் வண்ணை வெங்கடேசப்பெருமாள் கொடியேற்றம். |
| 2-ந் | ,, | (18-9 47) | வியாழன் விநாயகர் சதுர்த்தி. |
| 5-ந் | ,, | (21-9.47) | ஞாயிறு உரும்பராய் கருணாகரப் பிள்ளையார், நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார், வவனியா மருதோடைக் கந்தசுவாமியார் கோயில்கள் கொடியேற்றம். |
| 8-ந் | ,, | (24.9.47) | புதன் ஏனாதிநாயனார் குருபூசை. |
| 11-ந் | ,, | (27-9-47) | சனி பிரதோஷ விரதம். |
| 12-ந் | ,, | (28-9-47) | ஞாயிறு நடேசர் அபிஷேகம். நரசிங்கமுனைய நாயனார் குருபூசை. |
| 13-ந் | ,, | (29-9-47) | திங்கள் பூரணை விரதம். |
| 14-ந் | ,, | (30-9 47) | செவ்வாய் மஹாளய பக்ஷ ஆரம்பம், |
| 16-ந் | ,, | (2-10 47) | வியாழன் உருத்திரபசுபதி நாயனார் குருபூசை. |
| 17-ந் | ,, | (3-10-47) | வெள்ளி மகாபரணி. |
| 18-ந் | ,, | (4-10-47) | சனி கார்த்திகை விரதம் |
| 19-ந் | ,, | (5-10-47) | ஞாயிறு திருநாளைப் போவார் நாயனார் குருபூசை. |
| 25-ந் | ,, | (11-10-47) | சனி பிரதோஷவிரதம் அருணந்திசிவாசாரியர் குருபூசை. |
| 27-ந் | ,, | (13-10-47) | திங்கள் மஹாளய அமாவாசை |
| 28-ந் | ,, | (14-10.47) | செவ்வாய் நவராத்திரி விரத ஆரம்பம். |

# அரவிந்தர் செய்தி

1-ம் பக்கத் தொடர்ச்சி

இன்று பார்க்கையில் அவை பரிபக்குவமடைந்து விட்டதாகவும், கைகூடப்போகும், தருணமாகவும் காட்சியளிக்கின்றன.

### எனது செய்தி

சுதந்திர தினத்திற்காக ஒரு ஆசிச் செய்தி கொடுக்கவேண்டுமென்று என்னைக் கேட்டார்கள். ஆசிச் செய்தி அளிக்கக்கூடியய நிலைமையில் நான் இல்லை. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கக்கூடிய விஷயம் ஒன்றுதான். என்னுடைய குழந்தைப் பருவத்திலும், வாலிபப் பருவத்திலும் என் மனதில் தோன்றிய கனவுகளெல்லாம் இன்று பழுத்துக் கைகூடும் நிலையில் இருக்கின்றன. அவைகள் இந்திய சுதந்திரத்துக்குச் சம்பந்தப்பட்டவை பாரத சமுதாயம் இனி உலகிற்குச் செய்ய வேண்டிய சேவைக்குச் சம்பந்தப் பட்டவை. அந்தச் சேவையில் பாரத சமுதாயம் பெரும்பங்கு எடுத்து உழைக்கவேண்டியிருக்கும்.

நான் பல சமயங்களில் சொல்லியிருக்கிறேன், இந்தியா சுதந்திரமடைந்துவிட்டபிறகு தன்னுடைய செல்வ வளர்ச்சியிலும், அரசியல் அதிகார வளர்ச்சியிலும், இராஜீய வளர்ச்சியிலும கருத்தைச் செலுத்துவது அவசியமேயென்று. ஆனால், இந்த தன்னல அபேட்சைகளுடன் நின்றுவிடக்கூடாது. கடவுள் பக்தியிலு மக்கள் ஞான வளர்ச்சியிலும் உலக மக்களுக்கு வழிகாட்டும் வகையில் நாயகத்துவம் வகித்து உழைக்க வேண்டியிருக்கும்.

ஆசியா விழித்தெழுந்துவிட்டது அக்கண்டத்தில் பல பகுதிகள் விடுதலையடைந்துவிட்டன; சில விடுதலையடையும் தறுவாயிலிருக்கின்றன இன்னும் சில சுதந்திரப்போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்றன,

அவைகளும் விடுதலையடைய சிறு முயற்சிதான தேவை. அதுவும் சீக்கிரம் செய்து முடிக்கப்பட்டுவிடும். இந்தத் துறையில் இந்தியா பாடுபட ஆரம்பித்துவிட்டது. இந்த முயற்சியில் அது காட்டும் திறமையும் ஊக்கமும உலக அரங்கில் அதற்குக் கிடைக்கப்போகும்உன்னதஸ்தானத்திற்கு அறிகுறிகளாகும்.

### உலக ஒற்றுமை

உலக ஒற்றுமை ஏற்பட்டு வருகிறது ஆனால் அதற்கான பூரண முயற்சி ஆரம்பமாகவில்லை. பல இடைஞ்சல்களைச் சமாளித்து இந்தத் துறையில் வெற்றிபெற வேண்டும். அதற்கு வேண்டிய வேகம் இருக்கிறது. ஏற்கெனவே இம்மாதிரி விஷயங்களில் நமக்குள்ள அனுபவம் அறிகுறியாகுமானால் இந்தத் துறையிலும் இறுதியில் வெற்றிதான் கிடைக்கும் என்று திட்டமாகக் கூறலாம். இதிலும் இந்தியாவின் பங்கு மகத்தானதாயிருக்கிறது. தற்கால சூழ்நிலைகளின் சம்பவங்களைக்கண்டு அஞ்சாது பலிக்குமா, பலிக்காதா என்று சஞ்சலமடையாது, எதிர்காலத்தை மனதிலிருத்தி இந்தியா வேலை செய்யுமானால்கோழைத்தனத்திற்கும், துணிவிற்கும் என்ன வித்தியாசம் உண்டு என்பது தெளிவாக விளங்கும். இந்த முயற்சி பலிக்குமுன் அபாயம் அல்லது விபத்து நேரலாம் ஆனால் வெறும் சுயநலத்தில் விளைந்த முயற்சிகூட விபத்தைத் தடுத்துவிடலாம் இம்மாதிரி முயற்சியின் பயனை கடவுள்கூடத் தடுக்கமுடியாது என்று கூறுவதுண்டு.

உலகத்திற்கு இந்தியா ஆத்மார்த்திக போதம் செய்யத் தொடங்கிவிட்டது. இந்தியாவின் ஆத்மார்த்திக மேன்மை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நுழைந்துவிட்டது. இந்தப் புனித படையெடுப்பு பெருகக் கொண்டே போகும். இக்காலத்தில் நிகழும் பல விபத்துக்களுக்கிடையே இந்தியாவின் உதவியையே உலகம் நம்பிக்கையுடன் எதிர்நோக்கி நிற்கிறது. தம்நாட்டு உபதேசங்களை மட்டுமல்ல, ஆத்மார்த்திக அனுஷ்டானங்களையும் அதிகப்பேர் நாடிவருகின்றனர்.

நான் எவ்வளவோ எதிர்பார்க்கிறேன். ஒரு புது எண்ணம் புது லட்சியம் உலகத்து முற்போக்காளர்களை ஆட்கொண்டிருக்கிறது. மற்றத்துறைகளில் உள்ளதைவிட இந்தத் துறையில் இடைஞ்சல்கள் மகத்தானவை. ஆனால் கஷ்டங்கள்மனிதர்களால்சமாளிக்கப்படுவதற்காக நிகழ்கின்றன பரம்பொருளின் அருள் இருந்தால் கஷ்டங்கள் விலகியே தீரும். நன்முயற்சியிலிருந்து நல்ல காரியம் தோன்றும் என்கிறநியதி பலிக்கவேண்டுமானால் மனிதனின் அந்தராத்மா சத்தமாகி உள்ளுணர்வு வரவேண்டும், இந்தமுயற்சியின் பயன் உலகிற்கெல்லாம் சித்திக்க வேண்டுமானாலும் முயற்சிஇந்தியாவிலிருந்துதான் தொடங்கவேண்டும்.

இந்தியாவின் விடுதலை நாளன்று சொல்ல விரும்பியது இதுதான். இந்த என் ஆசை எவ்வளவு தூரம் நிறைவேறும், எவ்வளவு காலத்தில் நிறைவேறும் என்பது இன்றுதோன்றிவரும் சுதந்திர இந்தியாவைப் பொறுத்தது.

## 55,000 ஏக்கர் சேதம்

சமீப காலத்தில் நிகழ்ந்த வெள்ளத்தின் பயனாக, 55 000 ஏக்கர் நிலத்தில் விளைந்த நெல் அழிந்துவிட்டதென்று உள்ளூர் நெல் வாங்கும பகுதிப் பிரதம அதிகாரி தெரிவிக்கிறார். கண்டிப் பிரிவில் மாத்திரம் 9,500 ஏக்கர் நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விட்டதாம். வெள்ளத்தின் பலனாக எல்லாமாக 650,000 புசல் நெல் அரசாங்கத்துக்குக் கிடைக்காமல் போய் விடும் என்று மேற்படி அதிகாரி தெரிவிக்கிறார்.

# திருச்சி ரேடியோ

செவ்வாய் செப். 2

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஒ வி சுப்ரமணியம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல்வகை இசைத்தட்டு 8-30 பி ஆர் எஸ் மணி புல்லாங்குழல் 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஒ வி சுப்ரமணியம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஒ வி சுப்ரமணியம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 பி ஆர் எஸ் மணி புல்லாங்குழல் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சிதாகானம் இசைத்தட்டு 7-15 தாளவாத்தியக் கச்சேரி 7 30 தமிழில் செய்திகள் 7 45 எஸ் சோமசுந்தரம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஞானப்பாள் பால கிருஷ்ணன் வீணை, பாட்டு 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

புதன் செப் 3

காலை 7-15 கீதாரம்பம் 7.30 தமிழில் செய்திகள் 7-30 கே என் செல்லப்பாபாய் பாட்டு 8 ஆங்கிலத்தில செய்திகள் 8-15 ரேடியோ வாத்யகோஷ்டி 8.30 கே வ ராதகிருஷ்ணபிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே என் செல்லப்பாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கே என் செல்லப்பாபாய் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

5-40 கும்பகோணம் டி எஸ் சம்பந்தம் பிள்ளை வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 ஆங்கிலத்தில் செய்திகள் அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 லக்ஷ்மி கடாக்ஷம் நாடகம் 7-15 பத்திரிகைப் பரிசீலனை 7-30 தமிழில செய்திகள் 7-45 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 8 கும்பகோணம் டி எஸ் சம்பந்தப்பிள்ளை வயலின் 8-30 கே வ ராதா கிருஷ்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலப் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 4 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் செப் 4

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி லம்போதா பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 வாத்ய இசை இசைத்தட்டு 8-30 அனந்த லக்ஷ்மி வெங்கடராமன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2.05 குரல்வகை இசைத்தட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7.15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 எம் ஏ கல்யாண கிருஷ்ண பாகவதர் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ரேடியோ நாடக இசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 கண்டதேவி எஸ் திருவேங்கடம்ஐயங்கார் பாட்டு10-30 முடிவு.

வெள்ளி செப் 5

காலை 7 15 கீதாரம்பம் 7-30 தமிழில் செய்திகள் 7.30 டி என் கங்காபாய் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 மானாமதுரை எச் எஸ் கிருஷ்ணராவ் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பி ஆர் ராமசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி ஆர் ராமசாமி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 மானாமதுரை எச் எஸ் கிருஷ்ணராவ் பாட்டு 5-40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவிழிமிழலை வி மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7 45 இலக்கிய உணர்ச்சி சாதனங்கள் 8 டி என் கங்காபாய் பாட்டு 8-30 திருவிழிமிழலை வி மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 சித்ர கானம் இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

## மூன்று லட்சம் ரூபா

## இலங்கைக்கு இந்திய உதவி

இலங்கையில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கு நிவாரணத்துக்காக இலங்கைத் தேசாதிபதி ஓர் நிதி ஆரம்பித்திருக்கிறார் அல்லவா? அந் நிதிக்குப் பொது ஜனங்களிடமிருந்து இதுவரை 4 லட்சம் ரூபா வரை சேர்ந்திருக்கிறது. இந்திய அரசாங்கமும் இந்நிதிக்கு உதவி செய்திருக்கிறது. இலங்கையின் வெள்ளப் பெருக்கினால் அவதிப்படும் மக்களுடன் கொண்டுள்ள அநுதாபத்தைக் காட்டுமுகத்தான் இந்த மூன்றுலட்சம் ரூபாவையும் உதவத் தீர்மானித்திருப்பதாக இந்திய அரசாங்கத்தின் அறிக்கை ஒன்று கூறுகிறது. இத் தொகையைக் கூடிய சீக்கிரத்தில் உதவ நடவடிக்கைகள் எடுக்கப்படுமாம்.

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
வேண்டுமா?
*
அப்படியானால்
**இந்துசாதனத்தில்**
**விளம்பரஞ் செய்யுங்கள்**

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

**கப்பல் சீட்டு.**

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து ரெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினாங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

**வட இலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, சாங்கேசன்துறைரேட்.
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 33 2—9—47&

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விபரம்

## சமசமாஜிகளுக்கு மேலும் வெற்றி

சென்ற வியாழக்கிழமை நிகழ்ந்த தேர்தல் விபரம் வருமாறு:—

தம்பதேனியாவில் ஐ. தே. கட்சியைச் சேர்ந்தவரும், மிஸ்ரர் செனநாயக்காவின் சுற்றத்தவருமான மிஸ்ரர் ஆர். ஜீ. செனநாயக்கா 8 69 வாக்குச் சம்மதங்களால் வெற்றி கொண்டார்.

கிரித்தலேயில் மிஸ்ரர் டி. எம். ஹென்றிபாராய்ச்சி என்னும் சமசமாஜக் கட்சி அங்கத்தவர், ஐ. தே கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர் ஜெயவீர குறுப்பு என்பவரை 24 வாக்குச் சம்மதங்களால் வெற்றிகொண்டார்.

கழுத்துறையில் மிஸ்ரர் உபாலி பத்து வந்து டாவை என்னும் ஐ. தே. கட்சி அபேட்சகரை மிஸ்ரர் ஸி டீ எப். குணவர்த்தன என்னும் போல்ஷெவிக் லெனின் கட்சி (டக்ரர் கொல்வின் ஆர். டீ. சில்வாவின் கட்சி) அபேட்சகர் 1970 வாக்குக்களால் தோற்கடித்தார்.

அம்பலாங்கொடைத் தொகுதியில் இருந்து இரண்டு அங்கத்தவர்களைத் தெரிவதற்கான தேர்தல் சனிக்கிழமை நிகழ்ந்தது. அதில் போல்ஷெவிக் லெனின் கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர் வில்லியம் சில்வாவும், ஐ. தே. கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர் ஆர்தர் டீ சொயிஸாவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

நேற்றைத்தினம் மட்டக்களப்புத் தொகுதி, கோப்பாய்த்தொகுதி என்பவற்றுக்கான தேர்தல் நிகழ்ந்தது. இன்றும் நாளையும் தேர்தல்கள் இல்லை.

# அங்கும் பாகிஸ்தான்?

பலஸ்தீனத்து நெருக்கடியை எவ்வாறு தீர்க்கலாம் என்பதனை விசாரணைபுரிந்து அறிக்கை விடும்படி, ஐக்கியதேச ஸ்தாபனத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைச்சபை தனது அறிக்கையைச் சென்ற ஞாயிற்றுக்கிழமை சமர்ப்பித்துவிட்டது.

பலஸ்தீன நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அந்நாடு மூன்றாகப் பிரிக்கப்படல்வேண்டும். ஓர்பாகம் யூதர்க்கும் இன்னோர் பாகம் அராபியர்க்கும் கொடுக்கப்பட வேண்டும். இதனைவிட ஜெருஸலேம் நகரம் வேறாகப் பரிபாலிக்கப்படவேண்டும். இப்படியாகப் பிரிவினை செய்யப்பட்ட பிரதேசங்கள் 1947ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1-ம் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கப்பால் பூரணசுயராச்சியத்தை எய்தவேண்டும் என்று மேற்படி சபை தனது அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த அறிக்கை அராபியர்க்கு மிகுந்த அதிர்ப்தியை அளித்திருக்கிறது.

**நூற்குறிப்பு**

### சிவநாமாவளி

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முதலாந் தலங்களில் உற்சவ காலங்களிலும் நித்திய பூசை வேளைகளிலும் அடியார்கள் கூட்டமாக ஓதிவரும் சிவநாமாவளி, தேவார திருவாசகம் முதலிய ஏனைய தோத்திரப் பாக்கள் முதலியன அடங்கிய இச்சிறுபுத்தகம் பிழையறப் பரிசோதித்து நல்ல முறையில் அச்சிட்டு வெளிவந்துள்ளது; பிரதியொன்றன் விலை சதம்25: (அணா 4) பிரதிகள் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள புத்தகசாலைகளிற் பெறற்பாலன.

எமது பார்வைக்கு உதவிய பிரதியை உவந்தேற்றும்.

## பாஞ்சாலப் படுகொலை

3-ம் பக்கத் தொடர்ச்சி

பாகிஸ்தான் மந்திரியும் ஏனைய இந்தியமந்திரிகளும் விஜயம்செய்து சமாதானத்தை நிலைநாட்டப் பகீரதப் பிரயத்தனம் செய்துவருகிறார்கள். பாஞ்சாலத்திலே கலவர இடங்களிலிருந்து ஐரோப்பியர்களை அகற்ற 40 பிரிட்டிஷ் விமானங்கள் இங்கிலாந்திலிருந்து வந்திருக்கின்றன.

○

### முஸ்லீம்களின் ஓலம்

"மகாத்மாகாந்தியை இந்தியாவின்கவர்னர் ஜெனரலாக நியமிக்கவேண்டும் மவுண்ட்பேட்டன்பிரபுவைஉடனேலண்டனுக்கு அழைத்துக்கொள்ள வேண்டும். கிழக்குப் பஞ்சாபில், முஸ்லிம் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் கொலைசெய்யப்படுவது நிற்பாட்டப்பட வேண்டுமானால் இவ்வித நடவடிக்கை எடுப்பதுதான் ஒரே பரிகாரம்' பிரிட்டனிலுள்ள முஸ்லிம்லீக் கிளைசங்கத்தின் தலைவர் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

"இந்தப் படுகொலைகளுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உள்ள பொறுப்பாளிகள் மவுண்ட்பேட்டன்பிரபு, எல்லை நிர்ணய கமிஷனர் சர். சிரில் ராட்கிளிவ், பஞ்சாப் எல்லைப் படைத்தலைவர் மேஜர் ஜெனரல் டி. ரீஸ், இந்தியாவின் பிரதம தளபதி பீல்டு மார்ஷல் சர் கிளாட் ஆச்சின்லக், பிரிட்டிஷ் அரசாங்கம்,

"ய தொரு குற்றமும் அறியாத மக்கள் கொலை செய்யப்படுவதை நிறுத்துவது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனச்சாட்சிக்குகந்த கடமையாகும். மவுண்ட்பேட்டன் பிரபுவைத் திருப்பி யழைத்துக்கொள்ள வேண்டும். பூரண பொறுப்புக்கும் ஹிந்துக்கள் காரணமாகிவிட்டால் இந்தப் படுகொலைகள் நின்றுவிடும். இந்தியாவின் இரு கட்சியாருக்கிடையே போராட்டத்தைத் தொடக்கும் பிளவை உண்டாக்கியது பிரிட்டிஷ் அரசாங்கம். இப்பொழுது அவர்கள் இந்தியாமீதும் பாக்கிஸ்தான் மீதும் பொறுப்பைப் போட்டுத் தங்களது அடாத செயல்களை மறைக்க முயலுகிறார்கள். இந்தச் சமயத்தில்கூட பிரிட்டிஷ் அரசாங்கம் எல்லை நிர்ணயகமிஷன் அறிக்கையை நீக்கி விடலாம். பின்னர் அதை ஐக்கியதேச ஸ்தாபனத்தின் தீர்ப்புக்கு விடலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் இஸ்லாமின் முக்கிய கோட்பாடான சகிப்புத்தன்மையை பாகிஸ்தான் கடைப்பிடிக்கிறதென்பதை பாகிஸ்தான் உலகிற்கு நிரூபித்துக் காட்டவேண்டும். ஒவ்வொரு முஸ்லிம் மரணத்திற்கும் இன்று பிரிட்டன்தான் காரணம் என்று இன்று ஒவ்வொரு முஸ்லிமும் பிரிட்டன்மீதே குற்றம்சாட்டுகிறான். அதிலும் இதுவரை முஸ்லிம்கள் பிரிட்டன்மீது நம்பிக்கை வைத்திருந்து இப்பொழுது அவர்கள் ஏமாற்றமடைவதால் அவர்களுக்கு பிரிட்டன்மீதுள்ள மனக்கசப்பு மிகவும் அதிகமாகும்."

○

### கொச்சி சமஸ்தானத்திற் பொறுப்பாட்சி

கொச்சி சமஸ்தானத்திற் பூரண பொறுப்பாட்சியை மக்களுக்கு நல்க கொச்சி மகாராஜா தீர்மானித்துவிட்டார். அதன்படிக்கு இனி பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மந்திரிகளாலேயே சமஸ்தான நிர்வாகம் நடத்தப்படும்.

○

### ஆங்கிலரின் உருவச்சிலைகள்

இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சி ஆரம்பமானதன்பின் ஆங்கிலப் பிரமுகர்பலரின் உருவச்சிலைகள் ஆங்காங்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தச் சிலைகள் சுதந்திர இந்தியாவிலே இனி அவமதிக்கப்படவும்கூடும்; ஆகவே, அவற்றை அகற்றி இங்கிலாந்துக்குக் கொண்டுவந்துவிடவேண்டும் என்று ஓர் பிரிட்டிஷ் பிரமுகர் லண்டன் "டெயிலி டெலிகிறூப்' பத்திரிகையில் தெரிவிக்கிறார்.


### விற்பனைக்கு

ஒஸ்ரின்கார் 12. 6. X 4174. பி. ப. 6 மணிக்குப் பார்வையிடலாம். நல்லநிலையிலிருக்கிறது. நடராசா, கிறண்ட் ஹொட்டல் யாழ்ப்பாணம்.

Mis 126 2—9—47.


# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

வன்னிச் சுடர்கால் விசையோடு மரீஇய பாங்கிற்
பன்னற் பருகுன் றனைவ சூழ்தரு பான்மை யேபோல்
உன்னற் கரிய குமரேசனை யும்பர் கோனும்
இன்னற் படுவா னவரும் மிகல்செய்ய வுற்றார்

அக்கினிப் பிழம்பானது வேகமாக வீசுகின்ற காற்றுடன் சேர்ந்துள்ள பக்கத்திலே, பஞ்சுமலைகள் அந்தக் காற்றோடு கூடிய நெருப்புச் சுவாலையைத் தாக்கும் வண்ணஞ் சூழ்வதுபோல எவர்க்கும் நினைதற்கரிதாகிய குமாரக் கடவுளை இந்திரனும் துன்பத்தை யனுபவிப்பவர்களாகிய தேவர்களும் எதிர்த்துப் போர்செய்யத் தலைப்பட்டனர் என்பது கருத்து.

தீயானது தனக்குச் சகாயமாகவுள்ள காற்றோடு சேர்ந்துவிட, அக்காற்று எந்தத்திக்கை நோக்கி வீசுகிறதோ அந்தத் திக்கிற் பொருந்திய பஞ்சுமலைகள் போன்ற நிலையினராய்த் தேவர்கள் எதிர்த்தாரென்பார் "வன்னிச்சுடர் விசையோடு மரீஇய பாங்கில் என்றார்; காற்று வீசும் பக்கமல்லாப் பக்கத்திலிருப்பின் தீ அந்தப் பஞ்சு மலையிற் பற்றுதற்குக் காலதாமச முண்டாயினு முண்டாகு மாதலின் இங்ஙனங் கூறியவாறும். வேதங் காட்சிக்கும் உபநிடதத்துச்சியின் விரித்த போதக்காட்சிக்கும் அதிதாராதலின் "உன்னற்கரிய குமரேசன்" என்றார். இன்னற்படுமென்பதை உம்பர்கோனுடனுஞ் சேர்த்துப் பொருள்கொள்க; இன்னற்படு மென்பதற்குச் சூரபன்மன் முதலிய அசுரர்களாலே துன்பமுழக்கின்ற எனக்கொள்க சூரனுதியசுரர்களாற் பெருந் துன்பத்தினையனுபவித்து வருபவர்களாதலின இத்தேவர்கட்குக் கவலை மேலீட்டினால், அவர்களிடத்துள்ள ஞானம் முதலாம் நலங்களெல்லாந் தேய்ந்தொழிய, குமரேசனைத் தமக்கருள் செய்யும வண்ணம் வந்தருளிய தெய்வமென் றறியாது மயங்கிச் சூழ்ந்தனராதலின் இன்னற்படுவானவர் என்றார்; இப்படலத்திற்றானே வியாழபகவான் இந்திரன் முதலாந் தேவர்கள் செய்த பிழையைப் பொறுத்தருளக வென்று முருகக்கடவுளை வேண்டும்போது சூரன் முதலியோர் செய்த துன்பத்தால் நேர்ந்த கலக்கங் காரணமாகத் தேவரீரை இந்த இந்திரன் முதலிய தேவர்கள் உணர்கிலர் எனச் சமாதானங் கூறுதலைப் பின்னர்க் காண்க; இன்னற்படும் என்பதற்குச் சுப்பிரமணியப்பெருமானோடு எதிர்த்துச் சமர்புரிய முயன்றமையினாற் பெருந்துன்பத்தை அடையப் போகிறவர்களாகிய இந்திரன் முதலாந் தேவர் என எதிர்காலத்தில் வைத்துப் பொருள்கோடலும் பொருந்துமென்க.

[மரீஇய பாங்கில் – அக்கினிச் சுடர் காற்றின் விசையோடு சேர்ந்துள்ள பக்கத்தில்; முருகக் கடவுட்கு எதிராகவந்து சூழ்ந்த தேவரைப் பன்னற்படுகின் றென்றதனால், அத்தேவர்களது மிகுதி புலப்படலாயிற்று] (45)

தண்ணார் கமலத் துணைமாதரைத் தன்னி ரண்டு
கண்ணா வுடைய வுமையாள்தரு கந்தன் வானோர்
நண்ணா ரெனச்சூழ் வதுநோக்கி நகைத்து யாதும்
எண்ணாது முன்பே ற்றன தாட லிழைத்த வேலை

குளிர்ச்சி பொருந்திய செந்தாமரைப் பூவிலும் வெண்டாமரைப் பூவிலும் முறையே இருக்கின்ற இலக்குமியையும் சரசுவதியையும் தமது வலக்கண்ணாகவும் (இடக்) கண்ணாகவுங் கொண்டருளிய உமாதேவியாருடைய திருக்குமாராகிய கந்தக் கடவுள், அத்தேவர்கள் பகைவர்போல் தம்மை எதிர்ப்பதைப் பார்த்தருளிப் புன்முறுவல் செய்து, அதனைப் பொருட்படுத்தாது முன்னர்ச் செய்தவாறு தமது திருவிளையாடல்களைச் செய்தபோது என்பது கருத்து.

உலக மாதாவாகிய உமாதேவியார் இலக்குமி சரசுவதி யென்னுமிருவரையும் தம் கண்களாகப் பெற்றுள்ளாரென்பதை:—

திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண் ஞானப்
பெருமகள் நுதற்க ணாகப் பெற்றவான் செல்வங் கல்வி
அருமைவீ டளிப்பாள் யாவ ளவளுயிர்த் துணைவன் காண
ஒருமலை மறைந்து நாணி யொசிந்தபூங் கோம்பி னின்றாள்.

எனவருந் திருவிளையாடற்புராணத்திருவிருத்தத்தினாலுமுணர்க.

மகேசுவரிக்குக் கண்களாயுள்ளார் பூமகள் நாமகளாக, அவ்விரு தேவியர்க்கும் முறையே நாயகராயுள்ளார் அரிபிரமராக, அவ்வரிபிரமர்க்கு நினைக்கவு மெட்டாப் பரம்பொருள் கந்தக் கடவுளாக, அந்த அரிபிரமர்க்குக் கீழ்ப்பட்டான் இந்திரனாக, இவ்விந்திரன் வானவருடன் கந்தக்கடவுளை எதிர்த்தல் பேதமையின்பாற்படு மென்பார் கமலத் துணைமாதரைக் கண்ணாவுடையவுமையாள் தருகந்தன்; என்றார். இந்திரன்முதலாந் தேவர் உண்மையில் முருகவேட்கு மெய்யடியரன்றிப் பகைவரல்லரெனினும், மாயையால் மறைப்புண்டு இப்பொழுது பகைவர்போற் குமரவேளைச் சூழ்ந்தனராதலின், "நண்ணாரென" என்றார். நகைத்து – அத்தேவர்களுடைய அறியாமையையிட்டுப் புன்முறுவல் செய்து;

[எண்ணாது - அத்தேவர்கள் யுத்த சந்நத்தராய் வந்து எதிர்த்ததைப் பொருட்படுத்தாது.] (46)

விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறரு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)



## கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாட்பிடலாம்

**கால் ரூத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std .5 1-7-47—30-6 48 (செ)


## சைவ பரிபாலன சபை 5ம் வது வருடாந்தக் கூட்டம்

நிகழும் சர்வசித்து ஞு புரட்டாசி மீ 5 உ (21-9-47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் சபையங்கத்தவர்களாயுள்ளவர்கள் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றித் தனாதிகாரியிடம் செலுத்தவேண்டும். சந்தாப்பணம் நிலுவையுள்ளவர்கள் கூட்டத்தில் வாக்குரிமைக்கு அருகரல்லர்.

மு. மயில்வாகனம்
காரியதரிசி
சைவபரிபாலனசபை

11—8—47
யாழ்ப்பாணம்.

Mis 115 19.8-47—29-9-47


## ஹிந்தி—உருது

இந்த இரண்டு மொழிகளையும் தமிழ் மொழி மூலமாகவேனும், மலையாளப் பாஷை மூலமாகவேனும் இலகுவிற் பயிலுதலாகும்,

விரும்பினோர் விபரங்களுக்குப் பின்வரும் விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாகும்.

**அற்லஸ் ஹால்**
தபாற்பெட்டி இலக்கம் 649
கொழும்பு

Std. 18. 29-8-47



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் சட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48


## கடவுளும் விஞ்ஞானமும்

1 ம் பக்கத் தொடர்ச்சி

மம்) இல்லாமல் நிகழ்வதில்லை, ஒரு நிகழ்ச்சியோடு மற்றோர் நிகழ்ச்சிக்குச் சிறிதாயினுந் தொடர்பு உண்டு என்பது இவர்கள் கருத்து. இந் நிகழ்ச்சிகளுக்கு ஆதாரம் என்னவென்று அறிதலே இவர்கள் குறிக்கோள். கணிதத்தால் இவைகளை அறியலாம் என்று துணிந்தனர்; அதாவது; இவ்வுலகைப் படைத்தவன், கணித முறையை முற்றிலுங் கொண்டே இதைப் படைத்திருக்கிறான் என்று கருதினர்கள். இவர்கள் கடவுளை ஒரு கணித ஞானியென்றே துணிந்தார்கள். தான் சிறந்ததென்று கருதுங் குணத்திற்குக் கடவுளே இருப்பிடமாகக் கருதுதல் இயல்பு. (வரும்)

—தொண்டன்.


வியாபாரத்திற் கழகு

விளம்பரஞ் செய்தல்



# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம் - பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ரஸற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். சட்டிடம் யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

( Std 29 1-8—30 7-48 (F)



## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:

எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48



## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையான நிறமுடைய முரசு போன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனால் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்களுக்குப் புலப்படும்.

**பத்திரானு மாளிகை**
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna on Tuesday, September 2, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org